DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.STC 1438/2022

Prosecution witness – PW.3

| | | | |
|---|---|---|---|
| Name | :திருமதி.செல்லம்மாள் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1, A2 absent. Petition U/s 317 Cr.P.C filed through E-filing and allowed)
12.04.2025 – 12.25 PM
சாட்சியை நிலைய பெண் காவலர்-1451 அவர்கள் அடையாளம் காட்டினார்.
<u>முதல் விசாரணை</u>:-

1. நான் இராணிசேதுபுரம் கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது நாத்தனார். அ.சா.2 எனது கணவர். 1 வது எதிரியை தெரியும்.

2. எங்கள் ஊரில் உள்ள எங்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் நானும் எனது நாத்தனாரும் தனித்தனியாக வீடு கட்டி வசித்து வந்தோம். எங்கள் ஊரைச் சேர்ந்த ஒரு நபர் முத்துமுருகன் என்பவருக்கு அந்த இடத்தை எழுதி கொடுத்ததாக சொல்லி வீட்டை இடித்துவிட்டார்கள்.

3. சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு மாலை சுமார் 05.00 மணியளவில் முத்துமுருகன் என்பவர் JCB வாகனத்தை வைத்து இடித்துவிட்டார். இடித்த சமயத்தில் நான் ஆடு மேய்க்க சென்றுவிட்டேன். எனது வீட்டை இடிப்பதாக சொன்னதால் ஓடி வந்து பார்த்தேன்.

4. நான் வந்து பார்த்தபோது வீட்டை இடித்த நபர்கள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். மறுநாள் மதியம் காவல் நிலையத்தில் புகார் அளித்தோம்.

5. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:- இல்லை.**

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.